QP – 078

**I Semester B.Com./B.B.A./B.H.M. Examination, March/April 2022**
**(CBCS) (2019-20 and Onwards) (Repeaters)**
**TAMIL LANGUAGE (Paper – I) (Part – I)**

Time : 3 Hours  Max. Marks : 70

I. அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1) சுப்பிரமணியம் பாரதியாருக்கு 'பாரதி' என்ற பட்டம் வழங்கியவர்

1) புதுக்கோட்டை அரசவையினர்  2) எட்டயபுரம் அரசவையினர்

3) இராமநாதபுரத்து மன்னர்  4) தகடூர் மன்னர்

2) காசி ஆனந்தன் பிறந்த ஊர்

1) திருநெல்வேலி  2) நாவற்குடா

3) சென்னை  4) புதுக்கோட்டை

3) 'நரைதிரை'-என்னும் சொல்லின் இலக்கணக் குறிப்பு

1) வேற்றுமைத் தொகை  2) உம்மைத்தொகை

3) வினைத்தொகை  4) பண்புத்தொகை

4) 'காற்றுவழி கிராமம்'- என்னும் நூலின் ஆசிரியர்

1) ஐ. உலகநாதன்  2) ந.சுரேசு குமார்

3) ஏ.சு. வில்வரெத்தினம்  4) கபிலர்

5) மாறன் என்றால் யார் ?

1) சேரன்  2) சோழன்

3) பல்லவன்  4) பாண்டியன்  **(5×1=5)**

II. விரிவான விடை தருக.

1) கண்ணம்மா-என் குழந்தை என்ற கவிதையின் கருத்துகளைத் தொகுத்து வரைக.

(அல்லது)

கண்ணன் என் காதலன் என்னும் கவிதையின் கருத்துகளை பாரதியார் வழிநின்று விளக்குக.  8

P.T.O.

2) 'சாதிப்பிரிவினை' என்னும் கவிதையின் கருத்துகளை காசி ஆனந்தன் வழிநின்று விளக்குக.

(அல்லது)

'அன்பு' என்னும் கவிதையின் கருத்துகளைத் தொகுத்து வரைக. 8

III. இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

1) தாயாதி யோடு தனியிடத்தே பேசிடுவார்
உள்வீட்டுச் செய்தியெலாம் ஊரம் பலத்துரைப்பார்

(அல்லது)

புல்லாங் குழல்கொண்டு வருவான் -அமுது
பொங்கித் ததும்புநற் கீதம் படிப்பான் 4

2) தன்னைப்போல் தமிழ்செய்த மகளிரை
பறம்பு மலை வாழ்வை அழித்தவர்க்கே
தாரை வார்த்துக் கொடுத்தாள்

(அல்லது)

அவர்கள் மொழி பழகவும்
நிறம் பூசவும்
ஆயத்தமாய் உள்ளேன் நான் 4

IV. 'சுடுமணல்' என்னும் நாவலில் இருந்து பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு திறனாய்வு வடிவில் விடை தருக.

1) மகேந்திரனின் பாத்திரப் படைப்பு

2) சுடுமணல் நாவலின் உத்தி

3) லட்சுமியின் பாத்திரப் படைப்பு

4) கடையடைப்பின் போது மக்களின் இயல்பு வாழ்க்கையில் ஏற்படும் பாதிப்புகள்.

(2×7=14)

V. எவையேனும் ஐந்திற்கு விடை தருக.

1) அகரவரிசைப்படுத்தல் என்றால் என்ன ? சான்று தருக.

2) பலபொருள் குறித்த ஒரு சொல்லைச் சான்றுடன் கூறுக.

3) பின்வரும் சொற்களின் பொருள் வேறுபாட்டை எழுதுக.

இரை – இறை

ஒரு – ஒறு

கரை – கறை

பரி – பறி

4) வல்லினம் மிகா இடங்கள் நான்கினைச் சான்றுடன் விளக்குக.

5) திணை மயக்கம், பால் மயக்கத்தைச் சான்றுடன் கூறுக.

6) பின்வரும் பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொல் தருக.
அபிஷேகம், சம்பிரதாயம், ரத்து, சுபதினம்

7) 'மாநாடு' விளக்கம் தருக.

8) மரபுத்தொடர்கள் இரண்டினைக் கூறி விளக்குக. **(5×4=20)**

VI. ஏதேனும் ஒன்று குறித்து மடல் வரைக.

1) நீவிர் புதிதாகத் தொடங்கியிருக்கும் தொழிற்சாலைக்கு மின் இணைப்பு வசதி செய்துத்தர வேண்டி, உதவி மின்பொறியாளருக்கு மடல் ஒன்று வரைக.

2) நீங்கள் உயர் கல்வி மேற்கொள்ள, கல்விக் கடன் கேட்டு, அட்டவணைப் படுத்தப்பட்ட ஏதாவதொரு வங்கியின் மேலாளருக்கு மடல் ஒன்று வரைக. **(1×7=7)**

---